Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஐப்பசி 17 | (02 - 11 - 1992) | திங்கட்கிழமை | ஓசை 258

## பிரதேச செயலகங்களில் ஆளணி குறித்து மீளாய்வு

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் காணப்படும் பதவிகளுக்கான ஆளணி குறித்து மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது இம் மாவட்டத்தில் உள்ள அனைத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. இவ் அலுவலகங்கள் எதிர்காலத்தில் மினிக் கச்சேரிகளாக செயற்படவுள்ளது. இதற்காக இவ் அலுவலகங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன இவ்வாறாக அனைத்து பிரதேசசெயலகங்களும் விஸ்தரிக்கப்படவிருக்கிறன. இதனால் இவ்அலுவலகங்களுக்கு மேலதிக ஆளணி தேவைப்படுகிறது,இவ் ஆளணித் தேவையைப்பூர்த்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் தமிழருக்கு எதிரான அட்டூழியங்கள் அதிகரிப்பு

## குண்டுத் தாக்குதல், கத்திக்குத்து முஸ்லிம் காடையர் அடாவடித்தனம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கெதிராக முஸ்லிம் காடையர்களின் அட்டூழியம் அதிகரித்துள்ளது. நேற்றுமட்டும் தமிழருக்கு எதிராக முஸ்லிம் காடையர் மேற்கொண்ட குண்டுத்தாக்குதல், கத்திக்குத்து என்பனவற்றினால் ஒருவர் கொல்லப்பட்டார், ஒன்பது பேர் படுகாயமடைந்தனர். இதேவேளை பல தொழிலாளர்கள் பலமாகத்தாக்கப்பட்டும்உள்ளனர்.

வாழைச்சேனைப் புடைவைக்கடை ஒன்றில் முஸ்லிம்கள் வைத்த குண்டு ஒன்று வெடித்ததினால் ஐந்து தமிழ் மக்கள் படுகாயமடைந்ததுடன் அக்கடையும் பலத்த சேதமடைந்தது.

நேற்றுக்காலை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழைச்சேனை என்னுமிடத்தில் உள்ள தமிழர் ஒருவருக்கு சொந்தமான புடைவைக்கடை ஒன்றிலேயே இக்குண்டு வெடித்துள்ளது

மேற்படி குண்டு வெடிப்பைத் தொடர்ந்து வாழைச்சேனை முழுவதும் உள்ள பிரதான வீதிகள் தோறும் தடைகள் போடப்பட்டு அப்பகுதியில் உள்ள வீடுகள், மற்றும் கடைகள் அனைத்தும் சோதனையிடப்பட்டன.

படுகாயமடைந்த ஐந்து பேரும் உடனடியாக எடுத்துச்

திியில் தமிழ் தொழிலாளர் மீது முஸ்லிம் காடையர்கள் மேற்கொண்ட கொடூரத் தாக்குதல்களினால் ஒருவர் கொல்லப்பட்டதுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை முஸ்லிம் காடையர் குழு ஒன்று தமிழ் தொழிலாளர்மீது தாக்குதலை மேற்கொண்டதுடன் கத்திகளாலும்குத்தியுள்ளனர் இவர்களது கத்திக் குத்துக்கு இலக்கான ஒரு தமிழ் தொழிலாளி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். மற்றும் குத்துக் காயங்களுக்கு இலக்கான நால்வரும் ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவங்களைத் தொடர்ந்து ஏறாவூர்ப்பகுதிகளில் பதற்றம் நிலவுகின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பொலிஸ் அதிகாரிகள் 29 பேர் பதவியேற்பு

(கொழும்பு)

எல்லைப்புறக் கிராமங்களின் பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்ட இருபத்தொன்பது பொலிஸ் அதிகாரிகளும் இன்று முதல் பதவி ஏற்கவுள்ளனர். துரிதமான முறையில் சுடுபடைக்கலன் பயிற்சி அளிக்கப்பட்ட இவர்கள் தமது கடமைப் பொறுப்புக்களை இன்று முதல் ஆற்றத் தொடங்குவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## விமானக் குண்டு வீச்சில் காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி புறாப் பொறுக்கி வல்லைச் சந்தியில் கடந்த மாதம் 21ஆம் திகதி சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சிற்குஇலக்காகி காயமடைந்து யாழ் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று மரணமானார்.

வை. துரைச்சாமி (வயது 45 கரவெட்டி கிழக்கு கரவெட்டி) என்பவரே நேற்று யாழ் வைத்தியசாலையில் மரணமடைந்தவராவார். (பா)

வடபகுதியைச் சேர்ந்த

## புகையிரத ஊழியருக்கு தென்பகுதியில் நியமனம்

(வவுனியா)

வடபகுதியைச் சேர்ந்த ரயில்வே ஊழியர்கள் அனைவரையும் தென்பகுதியில் நியமனம் செய்வதற்கு புகையிரதத் திணைக்களம் முடிவு

செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.

வடபகுதியில் வவுனியாவை தவிர்த்து ஏனைய இடங்களில் உள்ள புகையிரத நிலையங்கள் அனைத்தும் கடந்த இரு

## மூன்றாம் தவணைப்பரீட்சை நவம்பர் 30 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் மூன்றாம் தவணைப் பரீட்சைகள் யாவும் இம்மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் டிசம்பர் 5-ம் திகதி மூன்றாம் தவணை விடுமுறைக்காக மூடப்படும் எனவும் யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர்களின் நலன் கருதி பாடத்திட்டங்கள் அனைத்தும் 30ஆம் திகதிக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. முன்னோடிதேர்வு செயன் முறைப் பரீட்சை

க. பொ. த. (சாதாரண) முன்னோடிப் பரீட்சையின் சங்கீதம், நடனம் செயன் முறைப்பரீட்சைகள் எதிர் வரும்4ஆம் திகதி புதன்கிழமை முதல்50 நிலையங்களில் இடம் பெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட பரீட்சை பிரதம தேர்வாளர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம் நாளை முற்பகல் 10-00 மணிக்கு கல்வித்திணைக்களத்தில் நடைபெறும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழ் தினசரியில்

## சிவராசனின் படம் பிரசுரம் உதவி ஆசிரியர் கைது

(கொழும்பு)

இலங்கை தமிழ்த் தினசரி ஒன்றில் சிவராசனின் படமும் நினைவஞ்சலியும் பிரசுரிக்கப்பட்டமை சம்பந்தமாக இந்திய அதிகாரிகள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து, அப்பத்திரிகையின் உதவி ஆசிரியர் ஒருவரும், செய்தி முகவர் ஒருவரும் இரகசியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய அதிகாரிகள் இலங்கை அரச அதிகாரிகளின் கவனத்திற்கு இதனைக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலையில் சுற்றிவளைப்பு; 13தமிழ்ப்பொதுமக்கள் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தின் நான்கு கிராமங்களை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் 13 பொது மக்களைப் பிடித்து முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 5 00 மணியளவில் கட்டைபறிச்சான்,சேனையூர், கடற்கரைச்சேனை. கிரவல் குழி ஆகிய இடங்களை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் 13 பொதுமக்களை கைசெய்து ஜி பி. எஸ் முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர்.

இ பாலசுப்பிரமணியம் [வயது 35, இரண்டு]பிள்ளைகளின் தந்தை 6 ஆம் வட்டார

சேனையூர்,] அ. அரிதாஸ் [வயது 38, இரண்டு பிள்ளைகள், கட்டைப்பறிச்சான்], மாத்தையா [வயது 40, இரண்டு பிள்ளைகள், கல்லம்பார்], சே மகேந்திரன் [வயது 27, ஒரு பிள்ளை சேனையூர்], நாகராசா [வயது 40, மூன்று பிள்ளைகள் கடற்கரை சேனை], க. சூரியமூர்த்தி [வயது 25, மூன்று பிள்ளைகள் கடற்கரை சேனை], செ

## மண்ணெய் விநியோகம் யாழ் செயலகம் பாரபட்சம்

மனம் செய்வதற்கு புகையிரதத் திணைக்களம் முடிவு செய்து குறிப்பிட்ட காலத்திற்குள் தென்பகுதி ரயில் நிலையங்களுக்கு பணிக்கு வராத ஊழியர்களை வேலை நீக்கம்

உள்ள புகையிரத நிலையங்கள் அனைத்தும் கடந்த இரு வருடங்களாக செயலிழந்து உள்ள போதிலும் புகையிரத ஊழியர்களுக்கு ஊதியம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

படுகாயமடைந்த ஐந்து பேரும் உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டு அரசினர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஏறாவூர்ப் பகு

# வேலையற்றோர் அதிகரிப்பால் மீண்டும் 'ரயர்'யுகம் தோன்றும்

## - லக்ஸ்மன் கிரியெல்ல எச்சரிக்கை

பதினைந்து ஆண்டுகால ஐ. தே. க ஆட்சி இருள் சூழ்ந்தது. இந்த காலப் பகுதியில் எழுபது வீதமான திட்டங்கள் தோல்வியிலே முடிந்துள்ளன. 1977 ஆம் ஆண்டு நாட்டை சுமுகமான நிலையிலே ஒப்படைத்தோம்.

வடக்கு -கிழக்கு பிரச்சினைக்கான தீர்வுக்கு ஒரு கமிஷன் வைப்பதாக கூறுகின்றார்கள். அதேவேளை தான் பாராளுமன்றத்தைவிட அதிக ரங்கள் பொருந்திய ஜனாதிபதி என்றார். அப்படியானால் ஏன் அரசினால் ஒரு தீர்வு திட்டத்தை முன்வைக்க முடியாதா? இவ்வாறு கண்டி மாவட்ட சுதந்திர கட்சி எம். பி. லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அத்துடன் வாழ்க்கைச் செலவு உயர்ந்து செல்கின்றது. போதைவஸ்துக்கள் அதிகரித்துள்ளது. அதிகாரிகள் மட்டத்திலே ஊழல்கள் நிரம்பி உள்ளன. எனவே தொடர்ந்து இந்த அரசு பதவியில் இருந்தால் நாடு அழியும். எனவே மக்கள் இந்த அரசை மாற்ற முன்வர வேண்டும்.

கண்டி மாவட்டத்தில் மட்டும் நான்கு லட்சம் இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆட்பற்றாக்குறையை நீக்க முயற்சி

# 7,000 பேரை திரட்டி துரிதபயிற்சிவழங்கமுடிவு

சிறிலங்கா இராணுவத்திற்கு புதிதாக ஏழாயிரம் பேரைத் திரட்ட முடிவு செய்யப்பட்டிருப்பதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா கூறியுள்ளார்.

இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவோர் துரித பயிற்சி அளிக்கப்பட்டு வடக்கு, கிழக்குப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியாவிலிருந்து திரும்பியோருக்கு அரச உதவிகள் நிறுத்தம்

(வவுனியா)

இந்தியாவிலிருந்து திரும்பி வந்த அகதி மக்கள், சிறிலங்கா அரசினால் உதவிகள் நிறுத்தப்பட்ட நிலையில் வடபகுதி நோக்கி வருகின்றனர்.

செப்டெம்பர் மாதம் தமிழகத்திலிருந்து கப்பல் மூலம் திருக்கோணமலை வந்து சேர்ந்த அகதி மக்கள் அங்குள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி அகதி முகாமில் அடிப்படை வசதி அற்ற காரணத்தினாலும், சிங்களக் குண்டர்களின் அச்சுறுத்தல் இருந்தமையினாலும் தாம் விரும்பி தமது ஊருக்குச் செல்ல முடிவு செய்தனர் இவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டிய உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக ஏராளமான அகதி மக்கள் தம் கையில் உள்ள பொருள்களை விற்று, வடபகுதி நோக்கி வருகின்றனர்.

இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு இம்மக்களை அனுப்பி வைப்பதற்கு தாம் விரும்பவில்லை என்றும் மீறிச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ் செயலகம் பாரபட்சம்

## கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

மண்எண்ணெய் விநியோகத்தில் யாழ். செயலக அதிகாரிகள் கையாளும் நடைமுறையை பல நோக்கு கூட்டுறவு சங்க அதிகாரிகள் வன்மையாகக் கண்டித்துள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் யாழ் செயலகத்தினால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் லீற்றர் 15ருபா வீதப் பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருவது தெரிந்ததே

இது தொடர்பாக ஏனைய பல நோக்குக் கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகள் யாழ். செயலக அதிகாரிகளிடம் வினவிய போதுவந்த மண்ணெண்ணெய் யாழ். பல. நோ. கூ. சங்கத்திற்கு வழங்கப்பட்டதாகவும் இனிவரும் மண்ணெண்ணெய்கள் ஏனைய சங்கங்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களது இக்கூற்றை கண்டித்த பிரதிநிதிகள் வருகின்ற மண்ணெண்ணெய்கள் அனைத்தும் சகல சங்கங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என கேட்டுள்ளதாக கூறப்படுகிறது.

[வயது 35, இரண்டு]பிள்ளைகளின் தந்தை 6 ஆம் வட்டாரம், சேனையூர்], நா. சுந்தரலிங்கம் [வயது 34, மூன்று பிள்ளைகளின் தந்தை, 6 ஆம் வட்டாரம், சேனையூர்], கு. சங்கர் [வயது 25, 6 ஆம் வட்டாரம், சேனையூர்], இவரது மனைவி, நா செல்வன் [வயது 27, நான்கு பிள்ளைகளின் தந்தை 6 ஆம் வட்டாரம்,

கள் கடற்கரை சேனை], செ. வர்ணகுலசிங்கம் [வயது 35, இரண்டு பிள்ளைகள், சேனையூர்], அருமைத்துரை [வயது 45, ஆறுபிள்ளைகள், கடற்கரை சேனை], சின்னவன் [வயது 38, இரண்டு பிள்ளைகள், சேனையூர்] ஆகியோரே கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டவர்கள் ஆவர்.

# பலாலி முகாமிலிருந்து ஷெல் வீச்சு குடிசை எரிந்துநாசம்; வீடுகள் சேதம்

(பண்டத்தரிப்பு)

பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் இரவுவேளைகளில் மக்கள் வாழ்விடங்களை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் ஒரு குடிசை முற்றாக எரிந்து சாம்பரானதுடன் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து நாளாந்தம் இரவு 10 மணி முதல் 11 மணி வரை அளவெட்டி, ஏழாலை, பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# படையினர் நலன்களைப் பாதுகாக்க பிரதமர் தலைமையில் விசேடகுழு

## பிரேமதாச நியமித்தார்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் யுத்தத்தில் ஈடுபட்டு வரும் சிறிலங்கா படையினரின் குறைகளை நிவர்த்திசெய்ய விசேட உயர்மட்ட குழு ஒன்றை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாச நியமித்துள்ளார். இக் குழுவின் தலைவராக சிறிலங்கா பிரதமரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இக் குழு வடக்கு - கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களுக்கு நேரடியாகச் சென்று படையினரின் குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய முயற்சி எடுக்கும் என்று தெரிவிக்கப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# மயானத்தில் பெண் சிசு

மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் அனாதரவான நிலையில் பெண் சிசு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது

நேற்றுக்காலை மயானப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# மீனவர் வெட்டிக்கொலை

மூதூர் இலங்கைத்துறை ஆற்றில் மீன் பிடிக்கச் சென்றுகொண்டிருந்த தமிழ் பொதுமகன் ஒருவர் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி மூதூர் கருக்க முனையைச் சேர்ந்த தம்பிராசா மரகதம் என்பவரே இவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டவர் ஆவார்.

# ஒவ்வொரு சிப்பாயிடமும் பிரதமர் குசலம் விசாரிப்பு

## ரூபவாகினி ஒளிபரப்பியது

(கொழும்பு)

வவுனியா இராஜேந்திரகுளம் இராணுவ முகாமிற்கு நேற்று முன்தினம் சென்ற சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்க, ஒவ்வொரு இராணுவ சிப்பாயிடமும் சென்று கலந்துரையாடியதை நேற்று ரூபவாகினி ஒளிபரப்பியது.

அப்பொழுது ஒவ்வொரு இராணுவச் சிப்பாயுடனும் அன்னியோன்யமாக டி. பி. விஜயதுங்கா பேசியவாறு இருந்தார்.

மேலும் மன்னார் பிரதான இராணுவ முகாமிற்குச்சென்ற

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தப்பி ஓடிய பொலிசால் அதிகாரி சுட்டுக்கொலை

(அம்பாறை)

விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த பொலிசார் ஒருவர் பொலிஸ் அதிகாரி ஒருவரைச் சுட்டுக் கொன்றதுடன் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலையும் செய்து கொண்ட சம்பவம் ஒன்று அம்பாறைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றி தெரிய வருவதாவது அம்பாறையைச் சேர்ந்த விசேட அதிரடிப் படைப்பிரிவைச் சேர்ந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தமிழ் அகராதி

கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, மற்றும் ஓவியம், சினிமா, நாவல். சிறுகதை, அரசியல், இலக்கியம் போன்ற தரமான நூல்களும், துளிர், சலனம், சுபமங்களா போன்ற சஞ்சிகைகளும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம் 405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [3218]

### விற்பனைக்கு உண்டு

பிறவுண், கறுப்பு, வெள்ளை சேவல், பேட்டுக் குஞ்சுகள், புறொய்லர் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகா பதி'' மார்க்கற் லேன், மானிப்பாய். (3562)

### நடிக்கிறீர்களா ?

'எனது கெட்டிக்காரர்கள்' முதலாம பிள்ளை, 30/- நூல்களிலுள்ள 19 நாடகங்களையும் நடிக்கிறீர்களா? என்னையும் கலந்தாலோசியுங்கள். நடிக்கும் முறை சொல்லித் தருவேன். அராலியூர் சுந்தரம் பிள்ளை 30, கடைச்சாமி வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். (3212)

### பற் சிகிச்சை நிலையம்

பற்சிகிச்சை நிலையம், (கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு எதிரில்) கே. கே. எஸ். வீதி, கொக்குவில். தினசரி 4 பி. ப. —6 பி. ப. ஞாயிறு: 10 மு. ப. —2 பி. ப. (3215)

### வெளிவந்துவிட்டது

''மாற்றம்'' காலாண்டு மக்கள் சஞ்சிகை, சிறுகதை, பொது அறிவு, குறுக்கெழுத்துப் போட்டி, கட்டுரைகள், சுவையான புதினங்கள் போன்றவற்றைக் கொண்டு வெளிவந்துவிட்டது ரூபா 10/- ஆண்டுச் சந்தா ரூபா 35/- பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (3542)

### விற்பனையாகின்றது

சைவநெறி ஆண்டு 10—11, கந்தபுராணம் உற்பத்தி காண்டம், கந்தன் புகழ் ஷஷ்டி கவசம் (ஆறுபடை வீடு), சித்திரம் ஆண்டு 11, வாலி-உரையுடன் விற்பனையாளர்களுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை, யாழ்ப்பாணம். (3545)

மொத்தமாகவும் சில்லறையாகவும் கலண்டர்கள் விற்பனைக்குண்டு. விலாசம் பதிப்பித்தும் கொடுக்கப்படும். வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்

# கட்டுமரத் தயாரிப்பிற்கு இலவ மரம் பயன்பாடு

## பொருண்மிய மேம்பாட்டுக் கழக அறிமுகம்

எமது பிரதேசத்தில் கட்டுமர மீன்பிடித் தொழில் ஒரு பாரம்பரியமுறையாகும். இக் கட்டுமரத் தயாரிபு காலம் காலமாக தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட அல்வீசியா எனப்படும் ஒருவகை மரம் பயன்படுத்தப்பட்டது.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் இவ் அல்வீசியா மரம் கொண்டுவரப்பட முடியாத காரணத்தால் புதிதாக இலவமரம் கட்டுமரத் தயாரிப்புக்கு பரீட்சார்த்தமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

இவ் இலவ மரமானது தமிழீழப் பகுதிகளில் குறிப்பாக வன்னிப் பகுதியில் கூடுதலாகக் கிடைக்கக்கூடியதாகும். இம்மரத்தில் விசேட தன்மைகள் கட்டுமரத் தயாரிப்புக்கு அல்வீசியாவிலும் பார்க்கச் சிறந்ததாகத் தொழிற்படுகின்றது. குறிப்பாக இலவமரம் நீரில் நன்கு மிதக்கக்கூடியது இம் மரத்தால் செய்யப்பட்ட கட்டுமரம் வெட்டியவுடன் ஈரமான நிலையில் கூட சுமார் 500 கி கிராம் நிறையைத் தாங்கக் கூடியதாகவும் உள்ளது.

மேலும் சில வாரங்கள் செல்ல காய்ந்தபின் 4 மரத் துண்டுகளால் பிணைக்கப்பட்ட 10 முழ நீளமான கட்டுமரத்தில் 1500 - 1800 கி. கிராம் வரையிலான நிறையை ஏற்றக்கூடியதாக உள்ளது.

அல்வீசியாவிலும் பார்க்க கூடுதலான காலம் நீரில் பாவிக்கக் கூடியதாக இலவ மரத்தின் தன்மை உள்ளது. இது மட்டுமன்றி நீரை உறிஞ்சும் தன்மையும் மிகக் குறைவாக உள்ளது. இவ்வாறான சிறப்பியல்புகளால் இம் மரம் கட்டுமரத் தயாரிப்புக்குச் சிறந்ததாக தற்பொழுது கருதப்படுகின்றது.

### விமானக் கட்டணம் அதிகரிப்பு

நேற்று முதல் ஏயார்லங்கா விமான சேவை அதன் கட்டணங்களை 4 2 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. கொழும்பிலிருந்து செல்லும் சகல நாடுகளுக்குமான விமானக்கட்டணம் நவம்பர் முதல் திகதியான நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

### யாழ். மாநகராட்சி நிதி கோரியுள்ளது

பத்தொன்பது லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை யாழ் மாநகரசபை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிடம் கோரியுள்ளது

கரையோரப் பகுதிகளாகிய நாவாந்துறை, பாஷையூர், கொழும்புத்துறை, குருநகர் பகுதிகளில் குடிநீர் விநியோகத்தை மேலும் முன்னேற்றி விஸ்தரிக்கவும், யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேலதிகமாக இன்னும் முப்பத்தைந்து குழாய்க் கிணறுகளை அமைத்து மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகத்தை மேற்கொள்ளவுமே மேற்படி தொகையை புனர்வாழ்வு புனரமைச்சிடம் கோரியுள்ளதாக தெரிய வருகின்றது

மேற்படி அமைச்சின் அங்கீகாரம் கிடைத்தவுடன் தமது நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (42)

# செயலாளருக்கு அஞ்சும் அரசியல்வாதிகள்

- காலி மாவட்ட எம். பி.

(கொழும்பு)

சில அரசியல் வாதிகள் தமது செயலாளர்களுக்கு அஞ்சியே நடக்கின்றனர், இதற்கு காரணம் தமது ஊழல்களை தமது செயலாளர்கள் வெளியிட்டு விடுவார்கள் என்ற அச்ச உணர்வே அவர்கள் அஞ்சி நடுங்குவதற்கு காரணம் சில அரசியல்வாதிகள் ஓய்வு பெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மாதிரியே நடமாடுகின்றனர்.

இவ்வாறு காலிமாவட்ட எம். பி. புத்திக குருகுல சூரிய காலி மாவட்டத்திலுள்ள கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடமாடும் சேவை செயலகம் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; எம். பிக்கள் கடந்த காலங்களில் தமக்கு தேவையான விதத்திலேயே காணிகளைப் பகிர்ந்தளித்தனர். செயலாளர்கள், மாமிமார்களுக்குத்தான் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன எனவும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு நிருபர்கள் மீது அமைச்சர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரேமதாசா அரசாங்கத்தைச் சேர்ந்த மூன்று முக்கிய அமைச்சர்கள் கொழும்பில் உள்ள வெளிநாட்டு நிருபர்கள் பற்றிக் குறை கூறியுள்ளனர். கொழும்பு தீப்பிடித்து எரிவது போல இவர்கள் செய்திகளை அனுப்பி வருவதால் வெளிநாட்டவர்கள் முதலீடு செய்யப் பின் நிற்பதாகவும் இதனால் அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கை தோல்வி அடையும், உல்லாசப் பயணிகள் தொகை வீழ்ச்சி அடையும் வாய்ப்பு ஏற்படுவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

வெளிநாட்டு பத்திரிகையாளர்களைச் சந்தித்த வர்த்தக வாணிபத் றை அமைச்சர் ஏ.ஆர் மன்சூர் இவ் விதம் வெளிநாட்டு பத்திரிகையாளர்களை குறைகூறியபோது அமைச்சர்கள் போல் பெரேரா, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் உடனிருந்தனர். இவர்கள் அனைவரும் அண்மையில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### சகாய விலையில் உரம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கமநல சேவை நிலையத்தில் விவசாயிகளுக்குத் தேவையான அமோனியா உரமும் பி I, பொட்டாஸ் ஆகிய உரவகைகளும் குறைக்கப்பட்ட சகாய விலைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

விவசாயிகளின் விவசாய அடையாள அட்டைக்கு இந்த உரங்கள் விநியோகிக்கப்படுவதாகவும் விவசாய அட்டை பெறாதவர்களான விவசாயிகள் தங்களது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து இவற்றைப் பெறமுடியுமென்றும் இது பற்றி தெரிவிக்கப்படுகின்றது. (42)

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாயில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் வேலை ஆரம்பமாகியுள்ளது

மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரியின் பணிப்பின் பேரில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் (ரீ ஆர். ஆர். ஓ) ஆதரவுடன் இது நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து சண்டிலிப்பாய் பிரதேசத்தில் உள்ள அகதி முகாம்கள் உட்பட பல இடங்களிலும் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் பணி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (42)

### திரைநீக்கம் செய்யப்பட்டது

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதிய

# மாவட்ட இணைப்பாளர் நாடு திரும்புகின்றார்

'சிறுவர் பாதுகாப்பு நிதியம்' (ஐக்கிய இராச்சியம்) அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் செல்வி றெபேகா மக்னையர் இரண்டுவருட சேவையை முடித்துக் கொண்டு நாடுதிரும்பவுள்ளார். இவரே தற்போது யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

உதவியுள்ளதுடன், கல்வித் திணைக்களம் பரீட்சைகளை நடத்த உதவியாக கொழும்பிலிருந்து பரீட்சைக்கான வினாத்தாள்களை எடுத்துவந்தும் விடைத்தாள்களை எடுத்துச் சென்றும் உதவியுள்ளார்.

இங்கு மக்களுக்குள்ள குறைபாடுகளை கொழும்பில் அரச திணைக்களங்களிடமும் அரசசார்பற்ற நிறுவனங்களிடமும் விளக்கிவந்துள்ளார்.


### காணவில்லை

சின்னராசா - குலேந்திரன் என்பவரை 1992- 10- 25 லிருந்து காணவில்லை. இவருக்கு வயது 26, கறுப்புநிறம், இடது கையில் 6 விரல்கள் உண்டு இவர் ஓர் மனநோயாளியாவார். இவரைக் கண்டவர்கள் சி சின்னராசா, 53, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை. என்ற விலாசத்திற்கு அறியத்தரவும். (3565)


## 4-ம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் : 08 - 10 - 1969

வீரச்சாவு : 02 - 11 - 1988

### லெப். நந்தன்

[கணபதிப்பிள்ளை லோகேஸ்வரன்]

சொந்தமண் காக்க
சுகமெல்லாம் துறந்து
செந்தணல் போல
சீறி எழுந்தவன் நீ

வானமென்னும் மேடையிலே
வந்துலாவும் நிலாப்போல
மானமதைக் காப்பதற்காய்
மறைந்து விட்ட மானமகன் நீ!

வாழும் வயதில் மண் காத்து
வண்ணத் தமிழ் காத்து
பாழும் சாவரக்கன் - கையினிலே
பயமின்றிச் சென்றவன் நீ

நந்த வனமாக பூத்திருந்த
நந்தனே! உன் நினைவு கோயிலடா
சொந்த நாடொன்று மலருமடா!
சோதியான உன் கனவு தீருமடா!

ஆலடி
காரைநகர்.
(3564)

சகோதரர்கள், உறவினர், நண்பர்கள்.

## நினைவு கூருகின்றோம் ...

## 1992-11-02

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் நெடுங்கேணிப் பகுதியில் வேவு பார்க்கச் சென்றபோது, சிறிலங்காப்படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

**சீலன்** (செல்லையா பாலகுமாரன் - வெள்ளாம் போக்கட்டி, அல்லாரை.)

1987ஆம் ஆண்டு கொக்குவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். மோகன்ராம்** (நாராயணசாமி ஜெயராம்- காட்டுப்புலம், தொண்டமானாறு - யாழ்.)

தெல்லிப்பழைப் பகுதியில் இந்தியப்படையினரின்

வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தகசாலை யாழ்ப்பாணம். (3546)

### தேவை

கறுப்புநிற கம்பளித் துணிகள், சகல அளவுகளும் வாங்கப்படும். தரம் அளவு ஆகியவற்றிற்கு ஏற்ப தகுந்த விலை கொடுக்கப்படும். கடிதமூலம் அல்லது நேரடியாக தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: மா. காலிங்கராசா 15, ராதா ஒழுங்கை, வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். (தட்டாதெருச் சந்திக்கு அருகாமையில். (3566)

## மாவீரர் நினைவஞ்சலி கூட்டம்

(வடமராட்சி)

கரவெட்டி வட்டப் பிரதேசத்தில் ஐப்பசி மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த 29 ஆம் திகதி இரவு 8 மணிக்கு கரவெட்டி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மணிவண்ணன் தலைமையில் அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது

இந்நிகழ்ச்சியின் போது மாவீரர்களது உருவப்படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தி கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து மாவீரர் பணிமனையைச் சேர்ந்த திரு பொன் தியாகம், வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. பாஸ்கரன். வடமராட்சி மகளிர் பிரிவுபொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி. வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த திரு அறவாணன் ஆகியோர் உரை நி-ழ்த்தினார்கள். (82)

பது குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும் இடம்பெயர்ந்த மக்களை பராமரிக்கும் பணிகளில் இவர் ஏனைய அமைப்புக்களை ஒருங்கிணைத்து இடம்பெயர்ந்த மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கியுள்ளார்.

இவரது சேவைகள் இடம்பெயர்ந்த மக்களுக்கு நேரடியாகக் கிடைத்துள்ளதுடன், சுகாதாரத் திணைக்களத்துக்கு அவசியமானஉதவிகளை வழங்கி வைத்திய சேவைக்கும் விளக்கிவந்துள்ளார். இவரது சேவையை கௌரவிக்குமுகமாக கடந்த சில தினங்களாக அரச திணைக்களங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இடம்பெயர்ந்த மக்களும் பிரியாவிடை வைபவங்களை நடத்திவருகின்றனர்.

செல்வி ரெபேகா மக்னையர் அவர்களது இடத்துக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளராக திரு. ஜே ன் குட்ஹ ’ன்ட் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்போது யாழ் மாவட்டத்தில் தங்கி வேலைகளை பார்வையிட்டு வருகிற ’ர்.

ஒட்டுசுட்டான் மட்பாண்டக்கூட்டுத்தாபன

## 65 உத்தியோகத்தர்கள் வேலையிலிருந்து நீக்கம்

(வடமராட்சி)

ஒட்டுசுட்டான் மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த 78 உத்தியோகத்தர்களில் 65 உத்தியோகத்தர்கள் வேலையால் நிறுத்தப்பட்டுள்ளனர். மற்றைய பதின்மூன்று உத்தியோ கத்தர்களும் இரண்டு வரு ட் சம்பளமின்றி கஷ்ட நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

வடக்கில் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த பின்னர் மின்சாரம் துண்டிக்கப்பட்டதைஅடுத்து இக்கூட்டுத்தாபனம்முற்றாகச் செயலிழந்துஉற்பத்திகள் பாதிக்கப்பட்டன. இதேவேளை அறுபத்தைந்து உத்தியோகத்தர்கள் தெற்குப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். தற்போதைய சூழல் காரணமாக இடமாற்றத்தை ஏற்றுக்கொள்ளாததினால் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கேட்டுக்கொண்டதற்குப் பதிலாக அறுபத்தைந்து உத்தியோகத்தர்களுக்கும் வேலையால் நிறுத்தப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்குறித்த ஊழியர்கள் தற்போது வேலையை இழந்துள்ளனர். இவர்களை வேலையால் நிறுத்திய போதிலும் இவர்கள்பணியாற்றிய கால வேதனம் வழங்கப்படவி ’லை.

இதேவேளை தற்போது இவ்வலுவலகத்தில் பதின்மூன்று உததியோக த்தர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு கடந்த இரண்டு வருடகாலமாக வேதனம் வழங்கப்படவில்லை வேதனம்வழங்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் எதுவும் தென்படவில்லை, இதுவிடயமாக இவ்வலுவலக அதிகாரிகள் பல தடவைகள் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளையும், அமைச்சையும் சந்தித்து இடர்நிலையைத் தெரிவித்தபோதிலும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்’படவில்லை

மேற்குறித்த ஊழியர்கள் பலரும் வேதனமும் இல்லாமல் வேலையும் இல்லாமல்திரிசங்கு நிலையில் காணப்படுகின்றனர் (82)

செய்யப்பட்டது

(கொழும்புத்துறை)

மன்னார் மாவட்ட முன்னாள் பொறுப்பாளர்(தளபதி) லெப். கேணல் சுபன் உட்பட அவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களினது திருஉருவப் படங்கள் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய முன்பாசப் பருத்தித்துறை வீதியில் திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது (24)

## கலந்துரையாடல்

[வடமராட்சி]

இன்றைய அரசியல் இராணுவ நடவடிக்கை பற்றிய கலந்துரையாடல் பருத்தித்துறை வட்ட பிரதேசத்தில் கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்களில் நடாத்தப்பட்டு வருகிறது.

எதிரியின் திட்டமிட்ட பிரசாரத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் மத்தியில் இருக்கும் சந்தேகங்களைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது

பருத்தித்துறை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன் இக்கலந்துரையாடல் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார். (82)

## கடற்றொழிலாளர் ஒன்றியக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தீவக கடற்றொழிலாளர் சங்கங்களின் ஒன்றியக் கூட்டம் 6-11-92 வெள்ளிக்கிழமை காலை 10 00 மணிக்கு தீவக கோட்ட அரசியல் நிர்வாக பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதில் வங்கிக்கடன் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற உள்ளதால் தீவக சகல கடற்றொழிலாளர் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் அனைவரும்தவறாது சமுகம் கொடுக்குமாறு ஒன்றியத் தலைவர் சி. கார்த்திகேசு தெரிவிக்கிறார். (88)

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுவின் மாதாந்த கலந்துரையாடல் நாளை காலை 9 00 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது

இதில் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## வயிற்றோட்டத்திற்கு சிறுகுழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

யாழ் அரியாலைப்பகுதியில் இருக்கும் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் குடியிருப்பு பகுதியில் வயிற்றோட்ட நோய் ஏற்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது. இம் முகாமில் ஏற்பட்டிருக்கும் வயிற்றோட்ட நோய்க்கு இலக்காகி ஊர்காவற்றுறைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துவந்துதங்கியிருக்கும் மாசிலாமணி என்பவரின் மகளான சுகன்யா என்ற மூன்று மாதப் பெண்குழந்தை உயிரிழந்துள்ளது. [42]

## ரொனிடிமெல் கொழும்புதிரும்புவார்

(கொழும்பு)

முன்னாள் தெவினுவரத் தொகுதிநாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நிதி அமைச்சருமானரொனிடிமெல் விரைவில் கொழும்பு திரும்பலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஐ தே க ஆட்சியில் பதினொரு ஆண்டுகள் நிதி அமைச்சராக இருந்தஇவர் தற்போது ’பிரிட்டனில் தங்கியுள்ளார் என்பதும், இவரது மனைவியான திருமதி மல்லிகா டிமெல் அண்மையில் லலித் காமினி ஆகியோரின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து விலகியவர் என்பதும் தெரிந்ததே.

தெல்லிப்பழைப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**சிலன்** (நவரத்தினம் விஜயகுமார் - சோலையாவளவு, தெல்லிப்பழை.)

**அலெக்ஸ்** (சிவபாதம் சிவதாஸன் - விளாங்கொடை அளவெட்டி.)

சங்கானையில், இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 7 வயதுச் சிறுமி உட்பட 2- தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு கனகராயன்குளம் பகுதியில், இந்தியப்படையினரின் காவலரண் மீதான அதிரடித்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**மேஜர் காசி** (சுப்பிரமணியம் சிவதாசன் ; 'நாகவேலகம்', சுன்னாகம் )

காரைநகர்- கோவளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் காயமுற்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். நந்தன்** (கணபதிப்பிள்ளை லோகேஸ்வரன்- ஆலடி, காரைநகர் )

அக்கராயன்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப்.பிலிப்ஸ்** (இரங்கையா கண்ணன்-கிருஸ்ணபுரம்-கிளிநொச்சி)

ஊர்காவற்றுறைப்பகுதியில் இந்தியப்படையினர் மற்றும், தேசத்துரோகிகளால் கைதாகி சுட்டுக்கொல்லப்பட்ட.

**காகம் / காசிம்** (நல்லதம்பி சந்திரசேகரம்-முத்தமிழ் வீதி, 6-ம் ஒழுங்கை, கொட்டடி - யாழ்)

மட்டக்களப்பில், இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட -

நாட்டுப்பற்றாளரான-

**வெள்ளையன்**

கனகராயன் குளத்தில், இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 4 - தமிழர்கள் இதேசம்பவத்தின் பின்னர் வீட்டினுள் போட்டு எரிக்கப்பட்ட இனமருதங்குளத்தைச் சேர்ந்த 2 - சகோதரர்கள்.

பண்டத்தரிப்பில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்-

1990-ம் ஆண்டு மட்டக்களப்பில் இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட மட்டு - செங்கலடியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5338)

**சிந்தனைக்கு**

மண்ணீரும் ஆகாது அகனருகே - சிற்றூறல்
உண்ணீரும் ஆகிவிடும் ....

- ஔவையார்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 02-11- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# சிறு முயற்சிகளிலும் பெரும் பயன்பெறலாம்

பல்வேறுபட்ட தொற்றுநோய்கள் யாழ் குடாநாட்டில் பரவிவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் காசநோய், தொழுநோய் உட்பட பொதுவான தொற்றுநோய்களான மலேரியா, வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் என்பனவும் காணப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

யாழ். குடாநாட்டில் இத் தொற்று நோய்கள் பரவுவதற்குப் பல்வேறு காரணிகள் ஏதுவாகவுள்ளன. வடபகுதி மீது சிறிலங்கா அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடையின் காரணமாக மக்கள் பெருமளவில் ஊட்டச்சத்தின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும் குறிப்பாக குழந்தைகளும், கர்ப்பிணித் தாய்மாரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக இவர்கள் விரைவில் தொற்றுநோய்களின் தாக்கத்திற்கு உட்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்கம் விதித்துள்ள மருந்துப் பொருள்களுக்கான கட்டுப்பாடும், அதிகாரிகளின் அசமந்தப் போக்கும் சில தொற்றுநோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியாமல் செய்துவிடுகின்றது. தற்பொழுது யாழ். குடாநாட்டின் வடமராட்சி கிழக்கிலும், பச்சிலைப்பள்ளியிலும் மலேரியா நோய் பரவுவதாக தெரிய வருகின்றது இதனைத் தடுப்பதற்குரிய 'மலத்தீன்' கிருமிநாசினி யாழ். மாவட்டத்திற்கு அனுப்பி வைப்பதில் கொழும்பிலுள்ள அரச அதிகாரிகள் அக்கறை காட்டுவதாக இல்லை. இதுவே நோய் பரவுவதற்கு ஏதுவாகியுள்ளது அதாவது தடைசெய்யப்பட்ட பொருள்களும் அதிகாரிகளின் புறக்கணிப்பால் கிடைக்காமல் இந் நிலை உருவாகியுள்ளது.

அத்தோடு தேவையான மருந்துப் பொருள்கள், தடுப்பூசிகள் என்பனவற்றையும் அரசாங்கம் வடபகுதி வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைப்பதாக இல்லை. இதன் காரணமாக நோய் ஏற்பட்டவர்களுக்குக் கூட மருத்துவம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு பல ஆஸ்பத்திரிகள் இராணுவத்தினால் சேதமாக்கப்பட்டும். ஆக்கிரமிக்கப்பட்டும் உள்ளதால் மக்கள் போதிய வைத்திய வசதிகளைப் பெற முடியாது அல்லலுறுகின்றனர், குறிப்பாக மயிலிட்டி, [காசநோய் வைத்தியசாலை] தெல்லிப்பழை, [மனநோய் வைத்தியசாலை] என்பன

# தென்னாபிரிக்காவில் அமைதிக்கு முட்டுக்கட்டை

# இனவெறி பிடித்த பொலிஸ் படையே!

உலகின் பல நாடுகளில் இருண்ட சக்திகள் பின்வாங்கிக் கொண்டு இருக்கின்றன. கொர்பசேவின் கிளாஸ்நொஸ்ட் சோவியத்யூனியனிலுள்ள இருள் படர்ந்த இடங்களுக்கு ஒளியைக் கொண்டு வந்ததோடு கம்யூனிசத்தின் இறப்புக்கும் வழி வகுத்தது ஒரு அமைப்பு என்ற முறையில் கம்யூனிஸ்ட் கட்சி மறைந்து விட்டது ஆனால். கம்யூனிஸ்டுகள் மறைந்து விடவில்லை. இவ்வாறே தென் ஆபிரிக்காவில் இன ஒதுக்கல் சக்திகள் மறைந்து விடவில்லை என்பதும் உண்மையாகும்.

இன ஒதுக்கில் கொள்கையில் இருந்து விலக தென்னாபிரிக்க ஜனாதிபதி டீ கிளார்க் முன் வந்தது முதல் ஜனநாயகத்தை நோக்கிய முன்னேற்றத்திற்கு தடை போடுவதை நோக்கமாகக் கொண்ட சக்திகள் தென்னாபிரிக்கசமூகத்தில் இருந்து வருகின்றன ஜனநாயகத்துக்கான பாதையில் முன்னேற தனது நாட்டை ஈடுபத்திய வேளையில் சர்வஜன வாக்கெடுப்பில் தென்னாபிரிக்க ஜனாதிபதி பெற்ற தீர்க்கமான வெற்றி அரசியல் ரீதியில் ஒரு பேருதவியாகும் ஆனால் தென்னாபிரிக்காவிலுள்ள இன ஒதுக்கல் சார்பு சக்திகள் அரசியல் ரீதியில் செயற்படுபவையல்ல. இறுதி வெற்றியிலான அவர்களின் நம்பிக்கை ஜனநாயக பாரம்பரியங்களை அடிப்படையாக கொண்டவையுமல்ல.

தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் சார்பு சக்திகள் பலம் வாய்ந்தவையாக திகழும்மிகப் பிரபல்யமான இடம் பொலிஸ்படையாகும். பொலிசார் கட்டுப்பாட்டை மீறி விட்டார்கள் என்ற எந்த ஒரு எண்ணத்தையும் மறுப்பதற்கு பதிலாக பொதுமக்களின் உதவிக்கு விண்ணப்பிக்க சர்வஜன வாக்கெடுப்பில் தான் பெற்ற பலமான பெரும்பான்மையை தென்னாபிக்க ஜனாதிபதி பயன்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி டீ கிளார்க்கின் நேச சக்திகளே பொலிஸ்படை சீர்திருத்தப்படல் வேண்டும்மெனக் கூறுகிறார்கள் தான் கூறுவதைப்போல பொலிஸ் படை மீதான முழு அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருப்பாரேயானால் பல புதுமையான நிகழ்வுகளுக்கு அவர் பொறுப்பாக இருப்பார்.

பொலிஸ் காவலில் இருந்த பொழுது மரணமானவர்கள் பற்றி விசாரணை நடத்திய பிரபல மரண விசாரணையாளரான டாக்டர் ஜொனத்தன் கிளக்ஸ்மன் தான் விசாரணை செய்த சம்பவங்களில் 90 சதவீதமானவை கொலைகள் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். இவற்றில் சில இன ஒதுக்களின் இருண்ட நாட்களில் நடந்தவையாகும். ஆனால் ஓரிரு மாதங்களுக்கு முன்னர் கூட இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

இரு மாதங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்காவின் பொஸ்படாங் நகரில் நடந்த படுகொலைகளுக்கும் பொலிசாரே காரணம். இச் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்ய கோரப்பட்ட பிரிட்டிஷ் பல்கலைக் கழக குற்றவியல் நிபுணர் டாக்டர் பீட்டர் வசிங்டன், பொதுமக்கள் தொடர்பு உணர்வு அற்றவர்களாக பொலிசார் உள்ளனர் என்ற முடிவுக்கே வந்துள்ளார். இன ஒதுக்கலை நடைமுறைப் படுத்துவதில் பல தசாப்தங்களாக ஈடுபட்டு வந்துள்ளபொலிசார் பொதுமக்கள் உறவை எவ்வாறு வளர்ப்பது என்பதை புதிதாக கற்றுக் கொள்ள வேண்டும்எனவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தென்னாபிரிக்க இராணுவ புலனாய்வுத் துறை தலைவரான ஜெனரல் வான்டீர் தொடர்ந்து இருந்து வருகிறார். இராணுவத்தில் அதே இருண்ட சக்திகள் இன்னமும் உள்ளன என்பதையே இது குறிக்கும் கறுப்பின உரிமைப்போராட்டவாதிகளான சிலர் ''சமூகத்தில் இருந்து நிரந்தரமாக இவர் அகற்றப்படவேண்டும்'' என்று 1985 ஆண்டில் உத்தரவிட்டவராக இவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி டீ. கிளார்க் பொலிஸ் அல்லது இராணுவம் மீது முழுக் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்பதையே இவைஎல்லாம்உணர்த்துகின்றன அவசியமான அடிப்படை மாற்றங்களை வெற்றிகரமாக எதிர்க்கும் சில சக்திகளை இவ் இரு அமைப்புக்களும் கொண்டுள்ளன அது அவ்வாறானதுதான் என்பதை ஒப்புக் கொள்ளும் வரை பிரச்சினையைத் தீர்ப்பது அரசாங்கத்தினால் முடியாத காரியமாகும்.

தென்னாபிரிக்க ஜனாதிபதி டீ கிளார்க்கும் கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலாவும் கடந்த காலங்களில் அரசியல் முதிர்ச்சித் தன்மையில் குறிப்பிடத்தக்க குணாதிசயங்களைக் காட்டியுள்ளனர். இன ஒதுக்கல் காரணமாக தனிமைப் படுத்தப்பட்ட நிலையில் இருந்த தென்னாபிரிக்கா அந்த நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பது இவர்களின் அரசியல் உறவின் மிகவும் உற்சாகமளிக்கும் காரணியாகும். ஆனால் இரு தரப்பு முகாம்களிலும் உள்ள தீவிரப் போக்காளர்களினால் இந்த உறவு சமீப காலத்தில் பெரும் அழுத்தத்திற்கு உள்ளானது.

இவ்இருவரும் மனம் திறந்த பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். பொலிஸ் இராணுவத்திலும் உள்ள கட்டுப்பாட்டை மீறிய சக்திகள் மீது தனது அதிகாரத்தைச் செலுத்தக் கூடியதாக இருக்கும் வரை முன்னேறிச் செல்வதற்கான பாதை சீரானதாக இருக்க முடியாது.

— இன்டர்கோ பிரஸ் —

## அணுவாயுத உடன்பாட்டில்

# இந்தியா - பாக், கைச்சாத்திட பிரிட்டன் வற்புறுத்து

(லண்டன்)

சர்வதேச ரீதியிலான அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் கையெழுத்திட வேண்டுமென்றும், காஷ்மீர் சம்பந்தமான பிரச்சினையை பேச்சுவார்த்தைகள் மூலம் அவை தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் பிரிட்டன் கேட்டுக் கொண்டுள்ளது. இது பற்றி தெரிவித்த பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் மேலும் கூறுகையில் இந்தியாவும், பாகிஸ்தானும் பாதுகாப்பில்லாத அணு உலைகளைக் கொண்டிருக்கின்றன என்றும், இதனால் தமது நாடு கவலையடைவதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

இஸ்லாமாபாத்திற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் டக்ளஸ் ஹேர்ட் தெற்காசியாவில் அணுசக்தி தொடர்பாக ஐந்து நாடுகள் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று கூறிய பாக்கிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீபின் யோசனையை வரவேற்றார்.

இதன் மூலம் இந்தியாவும், பாகிஸ்தானும் தத்தமது பாதுகாப்பு செலவினங்களைக் குறைத்து சமூக பொருளாதார முன்னேற்றங்களில் கவனம் செலுத்த முடியும் என்றும் குறிப்பிட்டார்.

## அங்கோலா தலைநகரில் மீண்டும் பலத்த மோதல்

(லுவாண்டா)

அங்கோலாவின் தலைநகர் லுவாண்டாவில் அரசுப்படைகளுக்கும், எதிர்க்கட்சியான யூனிட்டா படைகளுக்கும் இடையே கடும் சண்டை நடைபெறுவதாகத் தெரிய வருகின்றது. எனினும் லுவாண்டாவின் ஹோட்டல் ஒன்றில் இயங்கிவந்த யூனிட்டா படைகளின் தலைமையகத்தை அரசுப் படைகள் கைப்பற்றியிருப்பதாக போத்துக்கீசிய தொலைக்காட்சி அறிவித்தது. சர்வதேச விமான நிலையத்தை சுற்றி மோதல்கள் நிகழ்ந்ததாகவும் பெருமளவில் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் அங்கோலா வானொலி கூறியுள்ளது.

சென்ற மாதம் நடைபெற்ற தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ள யூனிட்டா மறுத்ததைத் தொடர்ந்து முறுகல் நிலை ஏற்பட்டதும், ஐ. நா. பார்வையாளர்கள் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே.

## காஷ்மீரில் குண்டு வெடிப்பு; 17 பொதுமக்கள் பலி

(டில்லி)

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பஸ் வண்டி ஒன்றில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் பதினேழு பேர் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அம் மாநிலத்தில் இப்போது தேர்தல்கள் எதை

...

தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கர்நாடக மாநில

## காங்கிரஸ் தலைமையை மாற்ற எம். எல். ஏக்கள் கோரிக்கை

(பெங்களூர்)

## ஊடுருவலை தடுக்க நடவடிக்கை எடுக்கவும்

இந்துசமயத் தலைவர்கள் கோரிக்கை

பழை, [மனநோய் வைத்தியசாலை] என்பன வற்றை இராணுவம் ஆக்கிரமித்துள்ளமை பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துபவையாகவுள்ளன.

மேலும், இலட்சக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் சுகாதார வசதிக் குறைவுடன் வாழ்ந்து வருகின்றனர். வறுமையுடனும், சுகாதார வசதிக்குறைவுடன் வாழும் இவர்களை நோய்கள் இலகுவாகப் பீடிக்கின்றன. யாழ். மாவட்டத்தில் நெருப்புக் காய்ச்சல் பரவுவதாக தெரிவித்துள்ள வைத்திய அதிகாரிகள், இதற்கு அகதி முகாம்களில் காணப்படும் சுகாதார கேடே முக்கிய காரணமாகவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இவற்றோடுதற்பொழுதுமாரிகாலமும் ஆரம்பித்துள்ளமையால், மக்கள் நோய்களினால் பீடிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. இந் நிலையில் மக்கள் இத் தொற்று நோய்கள் குறித்து மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் இயன்ற சிறிய அளவினதான சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது கொதித்தாறிய நீரைக் குடித்தல், உணவுகளை நன்றாக அவித்து சாப்பிடுதல், உணவுப் பொருள்களை ஈக்கள், கொசுக்கள் மொய்க்காது மூடி வைத்தல் போன்ற சிறியளவினதான நடவடிககைகளை மேற்கொள்வதன் மூலம் ஓரளவிற்காகவேனும் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கலாம். அதாவது எம்மால் இயன்றவற்றை யாவது அக்கறையாக மேற்கொள்வதன் மூலம் நோய்களைத் தடுக்க வாய்ப்புக்கள் உண்டு.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்திய அதிகாரிகளும் தம்மால் இயன்றவற்றை மக்களுக்குச் செய்ய முன்வர வேண்டும். சிங்கள அரசாங்கம் தடை விதித்துள்ளது; சிங்கள அதிகாரிகள் மருந்துக்களை அனுப்புவதற்கு அசட்டையாக உள்ளார்கள் என்பதெல்லாம் முற்றாக மறுக்கப்படக் கூடியவை அல்ல. இருப்பினும் நாம் தீவிர முயற்சிகள் எடுத்தால் பல சாதனைகளைச் சாதிக்க வாய்ப்புக்கள் கிட்டலாம். முயற்சி எடுத்தாலும் கிடைக்கப் போவதில்லை என்று எண்ணி நடவடிக்கையில் இறங்காமல் இருப்பதைவிட, முயற்சியினால் கிடைப்பது இலாபம்; கிடைக்காவிட்டால் நட்டம் எதுவுமில்லை என்று எண்ணத்தில் செயற்படுவதே இப்போதைக்கு உகந்த கொள்கையாகும். இதுவே இன்று இங்குள்ள அதிகாரிகள் மக்களுக்குச் செய்யும் சேவையாகவும் இருக்கும்.

---

(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியை மாற்ற வேண்டுமெனவும், அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கர்நாடக மாநில சட்டப்பேரவை உறுப்பினர்கள் எட்டுப் பேர் கட்சித் தலைமையை வற்புறுத்தியுள்ளனர்.

கர்நாடக மாநில முதல்வர் பங்காரப்பாவின் அரசுக்கு எதிராக காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்திருப்பதும், சில அமைச்சர்கள் தமது பதவிகளைத் துறந்திருப்பதும் தெரிந்ததே.

## அயோத்தியா பிரச்சினைக்கு காலக்கெடு வேண்டாம்

-காங்கிரஸ் கோரிக்கை

(டில்லி)

சிக்கலான அயோத்தியா பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்தவிதமான காலக்கெடுவையும் நிர்ணயிக்க வேண்டாம் என்று சமயத்தலைவர்களிடம் காங்கிரஸ் கட்சி விண்ணப்பித்துக் கொண்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; தற்போது பேச்சுவார்த்தை மூலம் காணப்பட்டிருக்கும் நல்லுணர்வு கட்டுமாணப் பணியை ஆரம்பிப்பதற்கு காலக்கெடு நிர்ணயிப்பதன் மூலம் பாதிக்கப்பட்டு விடும் என்றும், ஒரு தலைப்பட்சமான காலக்கெடு விதிப்பு முறையற்றது என்றும் கட்சியின் பிரதிநிதி சந்துல்வால் சந்தார்கர் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

## ராமர் ஆலய கட்டுமாணபணி டிச. 6இல் ஆரம்பிக்கும்

விஷ்வஇந்து பரிஷத்

[டில்லி]

அயோத்தியாவில் இராமர் ஆலயம் கட்டுவதற்கான கரசேவைப்பணியை டிசம்பர் ஆறாம் திகதி முதல் மீண்டும் தொடங்கப்போவதாக விஷ்வ இந்து பரிஷத் கூறியுள்ளது இது தொடர்பாக இவ் அமைப்பின் பொதுச் செயலாளர் அசோக் சிங்ஹல்செய்தியாளர்களிடம் கூறுகையில்; மத்திய அரசு கரசேவையைத் தடுத்து நிறுத்த எடுக்கும் எந்தவொரு முயற்சியாலும் விஷ்வ இந்து பரிஷத் பின்வாங்கி விடாது என்றும் தெரிவித்தார்.

## ராமர் ஆலயம் கட்டுவது சட்ட விரோதமானது

-அஜீத் சிங்

(டில்லி)

அயோத்தியாவில் இராமர் ஆலயத்தை கட்டும் பணியை மீண்டும் ஆரம்பிப்பது சட்ட விரோதமானது எனவும், இதனால் உத்தரப் பிரதேச அரசு கலைக்கப்படும் வாய்ப்பு ஏற்படும் எனவும் ஜனதா தள் (ஏ) கட்சியின் தலைவரான அஜீத் சிங் கூறியுள்ளார். அலகாபாத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில்; தமது கட்சி எந்தக் கட்சியுடனும் இணைந்து விடாது என்றும் குறிப்பிட்டார்.

---

யும் நட த வேண்டாமென்று அங்கு விஜயம் செய்த இந்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது முஸ்லிம் கிளர்ச்சியாளர்களே இக் குண்டு வெடிப்புக்கு பொறுப்பாளர்கள் என்று சந்

(டில்லி)

அண்டைய நாடுகளிலிருந்து ஊடுருவி வருவோரைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி இந்திய மத்திய அரசிடம் இந்து சமயத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் முடிவடைந்த இந்து சமயத் தலைவர்களின் கூட்டத்தில் அண்டை நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வருவோரால் அவர்கள் குடியேறும் மாநிலத்தில் அரசியல் அமைப்புக்கு பங்கம் ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் சிறுபான்மை மக்களை மதமாற்றம் செய்யும் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ஊழலை ஒழித்துவிட வி. பி. சிங் ஆலோசனை

[டில்லி]

தேர்தல் பிரசாரத்திற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்வது, ஒளிவு மறைவு இன்றி அரசு வெளிப்படையாக செயற்படுவது, மத்திய அரசின் அதிகாரங்களைப் பரவலாக்குவது போன்றவற்றால் ஊழலை அடியோடு களைந்துவிட முடியும் என்று இந்திய முன்னாள் பிரதமர் வி.பி. சிங் கூறியுள்ளார்.

திருவனந்த புரத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில்; அயோத்தியா பிரச்சினை பற்றி குறிப்பிட்டு சிக்கலான இந்தப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்படுவதையே தமது கட்சி விரும்புவதாகக் குறிப்பிட்டார்.

படகு கவிழ்ந்து

## 12 மணி நேரத்தின் பின் சிறுமி உயிருடன் மீட்பு

(லாஸ்பல்மாஸ்)

பத்துவயது பிரெஞ்சு சிறுமியொருத்தி அவளது வளர்ப்பு நாய்க்குட்டியொன்றுடன் 12மணி நேரத்திற்குபின், குடை சாய்ந்திருந்த படகொன்றின் கீழ் இருந்து மீட்கப்பட்டுள்ளாள்.

மேற்படி சம்பவம் கேனரி தீவில் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. மாரினே கிளெமென்ட் என்ற சிறுமி தனது பெற்றோருடன் பயணம் செய்த போது படகு கடலில் கவிழ்ந்தபோது சிறுமியும் நாயும் மேலே வரவில்லை எனவும் பெற்றோர் தெரிவித்தனர்.

பின்னர் இச்சிறுமியும் அவளது நாய்க்குட்டியும் இத்தாலிய சரக்குக் கப்பலொன்றினால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இந்திய-பாகிஸ்தான்

## செயலர்கள் மட்டப்பேச்சு இன்று டில்லியில் ஆரம்பம்

(டில்லி)

இந்திய-பாகிஸ்தான் அரசுகளுக்கிடையிலான செயலாளர் நிலைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பாகிஸ்தானின் பாதுகாப்புச் செயலர் தலைமையிலான பாதுகாப்புக் குழுவொன்று புதுடில்லி வந்துள்ளது.

இக்குழுவினருடனான பேச்சுக்கள் இன்று ஆரம்பமாகும் எனவும், இது சியாச்சென் பனிமலைப் பிரதேச பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் ஆராயப்படும் எனவும். இது ஆறாவது சுற்றுப் பேச்சுக்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் இப்பேச்சுக்களையடுத்து பாதுகாப்பு அமைச்சர் மற்றும் இணையமைச்சர்கள் ஆகியோரையும் தூதுக்குழுவினர் சந்திக்கவுள்ளனர்,

## பேச்சுவார்த்தைகள் குறித்து பி. எல். ஓ. மீளாய்வு

[ரியூனிஸ்]

கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக நீடித்து வரும் மேற்காசிய அமைதி பேச்சுக்கள் பற்றி மீளாய்வு செய்வதற்காக பலஸ்தீனிய தலைவர்களின் அவசரக் கூட்டமொன்றிற்கு பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் அழைப்பு விடுத்துள்ளார். இக்கூட்டம் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறும் எனவும், எல்லாப் பிரிவுத் தலைகளும் இதில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் பலஸ்தீன விடுதலை இயக்க அதிகார பூர்வ பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

ஈழநாதம்

### உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

கிளாலி பண்டிதர் குடியிருப்பு விளையாட்டுக்கழகத்திற்கும் தென்மராட்சி சம்பியன் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான உதைபந்தாட்ட போட்டி எதிர்வரும் 5-ம் திகதி மட்டுவில் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## வரவேற்பு கூட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு 91/92 கல்வி ஆண்டில் தெரிவான கலைப்பீடப் புதுமுக மாணவர்களுக்கான வரவேற்புக் கூட்டம் இன்று காலை 11 மணிக்குக் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

## மாவீரர் நாள் பணியாக குளம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தையொட்டி கிளாலி பண்டிதர் குடியிருப்பில் வசிக்கும் தீவுப்பகுதியைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்களினால் அப்பகுதியில் உள்ள ஒரு மைல் நீளமான குளம் ஒன்றும் சுமார் இரண்டரை மைல் நீளமான வாய்க்கால்களும் புனரமைப்பு செய்யப்பட்டுவருகின்றது.

இப்புனரமைப்புப் பணி கடந்த ஒருவாரமாக நடைபெற்று வருகின்றது எனவும், மிகவிரைவில் இப்புனரமைப்புப் பணி முடியும் தறுவாயில் உள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

# கட்சிக்குள் எழுந்த நெருக்கடிக்கும் எனது வருகைக்கும் தொடர்பில்லை

சந்திரிகா

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கும் எனது வருகைக்கும் சம்பந்தமில்லை என்று திருமதி சந்திரிகாகுமாரணதுங்க பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு வழங்கியுள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்; நான் கட்சியில் இல்லாத நேரத்திலும் இத்தகைய சம்பவங்கள் பல நடந்துள்ளன. நான் கட்சிக்குள் வந்து ஒரு வருடம் தான். ஆனால் 1975ஆம் ஆண்டிலிருந்து இந்த பிரச்சனை இருக்கின்றது. என்றும் குறிப்பிடடார் எனவே நான் கட்சிக்குள் சேர்ந்த பின்பு தான் கட்சியில் பிளவுகள், கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டது என்பதையும் நான் வன்மையாக எதிர்க்கிறேன் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன்திருமதி பண்டாரநாயக்கா எதுவிதத்திலும் தன்னை விசேடமாகக் கவனிக்கவில்லை எனவும், 1980 ஆம் ஆண்டில் சிறிமாவோவிற்கு குடியுரிமை பறிக்கப்பட்டதால் காலியானபாராளுமன்ற ஆசனத்திற்கு தம்மை நியமிக்கும்படி அத் தேர்தல் தொகுதியில் தொண்ணூறு வீதமான கட்சி உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அதனால் கம்பஹா மாவட்டத்திற்கு நான் புதியவர் அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

தமக்கு கட்சியின் ஒற்றுமையே முக்கியம் என்று வலியுறுத்திய திருமதி சந்திரிகா குமாரணதுங்க, பதவிகள் அல்ல என்றும் குறிப்பிட்டார். என்னால் கட்சியில் பிளவு என்ற சொல்லுக்கு இடமில்லாமல் கட்சியின்ஒற்றுமையைப் பேண சகல நடவடிக்கைகளையும் தான் எடுத்து வருவதாக மேலும் தெரிவித்தார்.

## சிறிலங்கா சுதந்திரக் கட்சி குழு தலைவரைநீக்க முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதம கொறடாவாக பதவி வகிக்கும் றிச்சாட் பத்திரனவை அப்பதவியில் இருந்து நீக்கும் முயற்சியில் இக் கட்சியின் அனுரா குழுவினர் தீவிரமாக இருப்பதாக தெரியவருகிறது.

இம் முயற்சிக்கு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களது ஆதரவைத்திரட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

### மயானத்தில்

பகுதிக்குச் சென்ற பொதுமக்கள் அனாதரவான நிலையில் பெற்றோரால் கைவிடப்பட்ட இப் பெண் குழந்தையைக் கண்டெடுத்து மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

மேற்படி வைத்தியசாலை ஊழியர்கள் அச்சிசுவை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர் தற்போது இக்குழந்தை குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் பராமரிக்கப்பட்டுவருகிறது. (ச)

# பண்டாரவன்னியன் நினைவு கற்சிலைமடுவில் அனுஷ்டிப்பு

வரலாறு எம்மை செம்மைப் படுத்துகிறது; சீர்படுத்துகின்றது. இவ்வாறு பண்டாரவன்னியனின் நினைவு விழாவில் முல்லை-மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா-தமிழன்பன் தெரிவித்தார். பண்டாரவன்னியனின் இராசதானியாகிய கற்சிலைமடுவில் நேற்று முன்தினம் அவரின் 189 ஆவது நினைவு தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதில் பெரும் திரளான மக்களும், பாடசாலை மாணவர்களும், மாணவிகளும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் தொடர்ந்து பேசிய தமிழன்பன் தமிழீழத்தின் நிலங்கள் பண்டைய காலத்தில் பல தமிழ் அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இந்த அரசுகளில் வன்னி வள பூமியை ஆண்ட இறுதித் தமிழ் அரசனாகிய பண்டாரவன்னியன் ஆங்கிலேயரை எதிர்த்து உரிமைப்போராட்டத்தை நடாத்தி தனது மண்ணிற்காக மரணித்தான். அந்த மாவீரரின் தியாகம் நாட்டுப்பற்று என்பன எம்மை செம்மைப் படுத்துகின்றது. எமது தலைவர் கூறுவார், வரலாறு எமது வழிகாட்டி என்று. இத்தகைய தோர் மாவீரர் வரலாறு எமக்கு, எமது போராட்டத்திற்கு சிறந்ததொரு பாடமாக அமைகின்றது. இத்தகைய விட்டு எரிந்து தமிழீழ விடுதலைப் போராட்டமாக தோற்றம் பெற்றிருக்கின்றது என்றார்.

இவ்விழாவில், வட்டப் பொறுப்பாளர் திரு. கலையரசன் திரு. சி. திருநாவுக்கரசு, சி வேதவனம், ரூபமூர்த்தி, சந்திரசேகரம் போன்றோர் உரை நிகழ்த்தினார்கள்.

### இந்தியா

செல்பவர்களுக்கு எந்தவிதமான உதவிகளும் வழங்கப்

### கிழக்கில்

முஸ்லிம் காடையர்களின் தாக்குதல்கள் தொடரலாமென அஞ்சி தமிழ் மக்கள் அப்பகுதிகளை விட்டு வெளியேறி வேறு கிராமங்களில் தஞ்சமடைந்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### புகையிரத

### க. பொ. த.

பிரதம தேர்வாளர்கள் தாமே நேரடியாக வந்து தமக்குரிய ஆவணங்களையும் அறிவுறுத்தல்களையும் பெற்றுச் செல்லுமாறும் தேர்வுநாடிகள் தமக்குரிய அனுமதி அட்டைகளை கல்விக்கோட்டத்தின் ஊடாக அதிபரிடம் பெற்று உரியதிகதிகளில் தேர்வுகளுக்கு தோற்றவேண்டுமெனவும் உதவிக் கல்விப் பணிப்பாளர்

கொக்கட் டிச்சோலைப் படுகொலை

# படையினர் விடுவிக்கப்பட்டமை உலக அரங்கில் ஆச்சரியம்

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள்தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருந்த பதிதொன்பது இராணுவத்தினர்களுக்கும்விடுதலைவழங்கிஇராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து பலர் ஆச்சரியமும் அதிர்ச்சியும் தெரிவித்துள்ளனர்.

இப்படிப்பட்ட நிகழ்வுகள் மீளவும் ஏற்படுவதைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டுமென்று பல மனித உரிமைக் குழுக்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளன.

இராணுவ நீதிமன்றம் வழங்கியுள்ள இந்தத்தீர்ப்பு மனித உரிமை குழுக்கள், பத்திரிகையாளர் மற்றும் கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் குழுக்களிடையே பெரும் ஆச்சரியத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக உண்மை துலங்கும் வரையும் உரியவர்களுக்குத் தண்டனை கிடைக்கும்வரை தாம் போராட்டம் நடத்தப்போவதாக மனித உரிமை மீறல்தொடர்பான குழு தெரிவித்தது.

உலகிற்குக் காட்டுவதற்கு நீதிவிசாரணைநடத்தி அதனை அப்படியே தண்டனை இல்லாமல் மூடிவைத்தது கண்டிக்கத்தக்கது என்று ஒரு தமிழ் அரசியல்வாதி தெரிவித்துள்ளார்.

## கப்பலில் செல்லவிருப்போர் நாளை சமுகம்தரப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்து கொழும்புக்கு அதிவிசேட சிகிச்சைக்குச்செல்லும் இரண்டாம் தொகுதி நோயாளர்கள் நாளை கப்பலில் ஏற்றிச்செல்லப்படவுள்ளனர்.

இவர்கள் இரண்டுநாட்களுக்குத்தேவையான உணவு, தண்ணீர் ஆகியவற்றுடன் நாளை காலை 7 00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சமுகமளிக்கும்படி யாழ் வைத்தியசாலைப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார் (பா)

### படையினர்

படுகிறது.

இதன் முதற்கட்டமாக வவுனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள இராணுவ முகாம்களுக்கு நேற்று முன்தினம் இக்குழுவினர் சென்று பார்வையிட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவில் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வர், மற்றும் இராணுவ அதிகாரிகள் இடம் பெறுகின்றனர்.

### யாழ் மாவட்டத்தின்

## அத்தியாவசிய தேவைகள் அரச அதிபர் பேச்சுவார்த்தை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சென்றிருக்கும் யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அங்கு அரச உயர் அதிகாரிகளுடன் யாழ். மாவட்டத்தின் அத்தியாவசிய தேவைகள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தஉள்ளார்.

கப்பல் மூலம் திருமலை சென்று இறங்கிய அரசாங்க அதிபர் அங்கு வடக்கு கிழக்கு மாகாண அரச அதிகாரிகளுடன் சில விடயங்கள் குறித்து பேச்சு நடாத்தினார். இதைத் தொடர்ந்து அரச அதிபர் கொழும்பு சென்றடைந்துள்ளார்.

இன்று முதல் கொழும்பில் உள்ள அத்தியாவசிய சேவைகள் நாயகம் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகளுடனும் திறைசேரி அதிகாரிகள் ஆகியோருடனும் நிதி அமைச்சின் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடாத்துவார் என்று நேற்று மாலை கொழும்பில் இருந்து எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ் அதிகாரிகளுடன் யாழ். மாவட்டத்தின் அத்தியாவசிய தேவைகள் குறித்து கருத்துப் பரிமாறுவார் என்றும் மேலும் தெரியவருகிறது. (க)

### பிரதேச

செய்வதற்கு வடக்கு கிழக்கு மாகாணசபையும் பொது நிர்வாக மாகாணசபைகள் அமைச்சும் துரித நவடிக்கை எடுத்து வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் குறித்து ஆராய்ந்து வரும் அரச அதிகாரிகள் இம்மாவட்டத்தில் தற்போது கடமையில் இருக்கும் ஊழியர்கள், மேலதிகமாகத் தேவைப்படும் ஊழியர்கள் ஆகிய அம்சங்கள் குறித்து

### பலாலி

யடைப்பு, பனிப்புலம், பிரான்பற்றுப் பகுதி பொதுமக்களின் வாழ்விடங்களை நோக்கி தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல்களை நடத்தி வருவது தெரிந்ததே.

இதன் தொடராக நேற்று முன்தினம் இரவு பண்டத்தரிப்பு பகுதி மக்கள் வாழ்விடங்களைக் குறியாக கொண்டு இராணுவம் ஏவிய எறிகணைகளால் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு சமீபமாக இருந்த ஓலைக் குடிசை ஒன்று முற்றாக எரிந்து சாம்பரானதுடன் துரைராசா, திருமதி வரதலட்சுமி, கனகசுந்தரம் ஆகியோரது வீடுகள் உட்பட சில வீடுகளும் சேதமடைந்தன.

மேற்படி பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்து வருவதால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. (ச)

### தப்பி ஓடிய

பொலிசார் ஒருவர் முன்னறிவித்தல் இன்றிப் பல நாட்களாக கடமைக்குவராமையால் அவரது நிலையை அறியும் பொருட்டு பொலிஸ் அதிகாரி ஒருவர் அவரது வீட்டிற்குச் சென்றுள்ளார்.

அங்கே வைத்து விசேட அதிரடி பொலிஸ்காரர் பொலிஸ் அதிகாரியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது அவர் அவ்விடத்திலேயே துடிதுடித்து மரணமானார். இதனைத் தொடர்ந்து விசேட அதிரடி பொலிஸ்காரர் அத்துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என கிழக்கு மாகாண உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் சிங்கள பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

### ஒவ்வொரு

சிறிலங்கா பிரதமர் அங்கு உணவு சமைக்குமிடத்திற்குச் சென்று மூடையில் வைக்கப்

மான உதவிகளும் வழங்கப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (தி)

அமைகின்றது இத்தகைய மாவீரர் ஏற்றிச் சென்ற விடுதலைத்தீயே இன்று கொழுந்து

புகையிரத

வழங்கப்பட்டு வந்ததாம்.

தற்போது தென்பகுதி ரயில் நிலையங்களில் ஊழியர் பற்றாக்குறையைப் போக்கும் எண்ணத்துடன் மேற்படி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடபகுதியிலிருந்து தென் பகுதி நோக்கிச் செல்லும் ரயில்வே ஊழியர்கள் மதவாச்சி, அனுராதபுரம், கல்கமுவ ஆகிய ரயில் நிலையங்களில் பணிபுரிவதற்கு நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

வேலையற்றோர்

பின்றி உள்ளனர். வேலை வாய்ப்பு இன்மையினால் மீண்டும் ஒரு ஜே. வி. பி. உருவாக வழிவகுக்கும்.

நாட்டின் வேலையற்றவர்களின் தொகை அதிகரித்து போனால் மீண்டும் ஒரு 'டயர்' யுகம் உருவாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தோற்றவேண்டுமெனவும் உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

மூன்றாம்

முன் பூர்த்தியாக்கப்படல் வேண்டும் எனவும் ஆவர் அறிவித்துள்ளார்.

ஆண்டு 3, 4, 5 மாணவர்களுக்கு 30ஆம் திகதி தமிழ், ஆங்கிலமும் டிசம்பர் முதலாம் திகதி கணிதமும் சமயமும் இரண்டாம் திகதி சுற்றாடல் கல்வி பரீட்சைகளும் நடைபெறவுள்ளன. ஆண்டு 6 முதல் 11 வரையான மாணவர்களுக்கு 30ஆம் திகதி தமிழ், வர்த்தகம், மனைப்பொருளியல், விவசாயமும், முதலாம் திகதி சமூகக் கல்வியும், வரலாறும், சித்திரம், சங்கீதம், நடனமும், இரண்டாம் திகதி கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களும் மூன்றாம் திகதி விஞ்ஞானம், சமயம் ஆகிய பரீட்சைகளும் நடைபெறவுள்ளன.

ஊழியர்கள், மேலதிகமாகத் தேவைப்படும் ஊழியர்கள் ஆகிய அம்சங்கள் குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

இம் மாவட்டத்தின் மேற்படி நிலைமைகள் குறித்து அண்மையில் இம்மாவட்டத்திற்குநேரடியாக விஜயம் செய்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆலோசகர்களில் ஒருவரான திரு மார்க்கண்டு நேரடித்தகவல்கள் சிலவற்றை பெற்றுக் கொண்டிருக்கிறார். இவர் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் இம் மாவட்டத்திற்கான ஆளணி தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கை வடக்கு கிழக்கு மாகாண அரசின் பிரதம செயலாளரிடம் இன்று சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இவ்வறிக்கை பரிசீலிக்கப்பட்டதும் மேற்படி விடயம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

வருவதால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. (ச)

சிவராசனின்

கொண்டு வந்ததாகவும், இவ் அஞ்சலி விளம்பரம் சுவிட்சலாந்து நாட்டில் வசிக்கும் ஒருவரால் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றும் மேலும் தெரிய வந்துள்ளது.

உணவு சமைக்குமிடத்திற்குச் சென்று மூடையில் வைக்கப்பட்டிருந்த அரிசியை கையிலெடுத்துப் பார்வையிட்டார்.

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் முகாமிட்டு இருந்த இராணுவத்தினரையும் அவர் பார்வையிட்டார். இக்காட்சிகளும் ரூபவாகினியில் நேற்று ஒளிபரப்பாகியது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வேலுப்பிள்ளை கதிராசிப்பிள்ளை

கீரிமலையைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி வேலுப்பிள்ளை கதிராசிப்பிள்ளை 30-10-92 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா வேலுப்பிள்ளையின் (அடைவு கடை, கல்லூரி வீதி, காங்கேசன்துறை) அருமை மனைவியும், திருமதி சிவராசா தவமலர், சிவபாலன் (அப்பு), சிவசண்முகம் (செல்வன்), சிவநேசன், சிவயோகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராசா, சுகுணா, சாந்தி ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 31-10-92 அன்று தெகிவளையில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்
(5342) கு. சக்திவேல்

## திருமதி நாகரத்தினம் லீலாவதி

திருமதி நாகரத்தினம் லீலாவதி 30-10-92 அன்று காலமானார். இவர் நாகரத்தினத்தின் (ஓய்வு பெற்ற காசாளர். இலங்கை வங்கி) அன்பு மனைவியும், ஜெகநாதன், லோகநாதன் (சுவிஸ்), விஜயநாதன் (ஜேர்மன்), புஸ்பநாதன் (லண்டன்), குலநாதன்(மல்லாகம் ம. ம.வி.) ஆகியோரின் அருமை தாயாரும், திருமதி மகேஸ்வரி சந்தையா, திருமதி ஜெயராணி இராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மூத்த மகளும், ஜெ. யோகமலர் (தெல்லிப்பழை வைத்தியசாலை ஊழியர்), லோ. ரோகினி (சுவிஸ்), வி சிவச்சந்திரா (ஜேர்மன்) ஆகியோரின் மாமியாரும், லாவண்யா (சுவிஸ்), யாழினி (ஜேர்மன்) ஆகியோரின் பேர்த்தியும், பிறேமதாஸ், பிறேம்குமார் (லண்டன்), பிறேமாயினி (V.M.M.V.), வனித்தா, சுனித்தா (யூனியன் கல்லூரி தெல்லிப்பழை) ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் உரும்பராய் இளங்காட்டு மயானத்தில் 01-11-92 நேற்று தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், ஏற்றுக் கொள்ளவும்.

ஞானவைரவர் கோயில் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். [5341]

தகவல்:
நா.ஜெகநாதன்
(மகன்)

# தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்கள்

### உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

| | | |
|---|---|---|
| கல்வித் தகைமைகள் | :- | 8-ம் வகுப்பு தொடக்கம் க.பொ.த (உயர்தரம்) வரை |
| உயரம் | :- | 5' 6'' |
| வயது | :- | 18 தொடக்கம் 30 வரை |

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 05-11-1992-ம் திகதி வரை நாவலர் வீதியிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாகச் சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும், நேர்முகத்தேர்வின் இறுதித்தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாக சமுகம்தரவும்

பா. நடேசன்
பொறுப்பாளர்,
காவல்துறை, தமிழீழம்.

(5340)

5-11-92 முதல்

O/L

PAPER CLASS

யூனிவேர்சல்

கந்தர்மடம்-யாழ்ப்பாணம்

(5339)

# உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 01. 10. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6418

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:-

28-6640, 27-5822, 24-8632, 28-425, 22-9005, 24-9489, 40-270, 28-5476, 42-3924, 28-523, 22-5281, 41-9995, 42-2323, 24-6448, 26-5760, 24-207, 28-1085.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்

71-4984, 40-4760, 26-4429, 26-1582, 24-4707, 43-0517, 26-2745, 41-8096, 27-9661, 40-2249, 24-4238, 26-6417, 26-3632, 41-1462, 41-8035, 41-1665, 26-1019, 26-4672, 27-6764, 26-4450, 26-9992, 41-6933, 26-3815.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.